**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**
**முன்னிலை: திரு.K.N.குரு, பி.ஏ.,பி.எல்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**
2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24–ஆம் நாள் வியாழக்கிழமை
**அசல் வழக்கு எண். 321/2021**
(CNR No.TNTS060004822024)

1. G.தாமரைவல்லி.
2. கணேசன். ..... வாதிகள்

/எதிர்/

1. தமிழ்நாடு அரசு
அதன் மாவட்ட ஆட்சியாளர் மூலம்,
தென்காசி.
2. வட்டாட்சியர், தென்காசி வட்டம்.
3. T.நவன் சந்தணமுத்து.
4. T.நாடார்கண்ணு.

..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (24.07.2025) விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.மோகனகிருஷ்ணன் மற்றும் செல்வி.S.வனஜா ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3,4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.S.கைலாசம் அவர்கள் ஆஜராகியும், வா.சா.1 யை குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், வாதிகள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினாலும், வாதிகளை அழைத்தும் ஆஜராகததாலும், வாதிகளின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

அ) 1 முதல் 3 தபசில் சொத்துக்களை 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்வதன் மூலம் 1ம் வாதி இதன் தபசில் சொத்தை அனுபவித்து வருவதை 3,4 பிரதிவாதிகள் எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்ககோரியும்,

ஆ) 4ம் தபசில் சொத்துக்களை 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்வதன் மூலம் 2ம் வாதி இதன் தபசில் சொத்தை அனுபவித்து வருவதை 3,4 பிரதிவாதிகள் எவ்வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்ககோரியும்,

இ) 1 முதல் 3 தபசில் சொத்துக்களுக்கு 1ம் வாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்து உத்தரவிட வேண்டும் என 2ம் பிரதிவாதி பெயருக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும்,

ஈ) 4ம் தபசில் சொத்துக்கு 2ம் வாதி பெயருக்கு பெயர் மாற்றம் செய்து உத்தரவிட வேண்டும் என 2ம் பிரதிவாதி பெயருக்கு உத்தரவிட்டு செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும்,

இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிகள், பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

PW1 not present. No representation. Suit is dismissed for non prosecution.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–K.N குரு**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**தென்காசி.**